அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை : 03/2016

எனது இல : PSC/APP/03/62/2012

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்

இல 177,

நாவல வீதி,

நாராஹேன்பிட்ட.

கொழும்பு – 05. 24

2016 மே மாதம் 24 ஆந் திகதி

சகல அமைச்சுக்களது செயலாளர்களுக்கும்,

திணைக்களத் தலைவர்களுக்கும்.

**வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை தொடர்பாக நிவாரணம் வழங்குதல்**

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 க்கு அமைவாக திருத்தப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புகள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களின் பிரகாரம் வருடத்திற்கு இரு முறை வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் நடாத்தப்படல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு திருத்தப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புகள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைவாக ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டலையும், தரம் II க்கு பதவி உயர்வு வழங்கப்படும் உத்தியோகத்தர்கள் பதவி உயர்வுத் தினத்திலிருந்து 03 வருடங்களுக்குள் II ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டலையும், தரம் I க்கு பதவி உயர்வு வழங்கப்படும் உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்குள் III ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டலையும் பூர்த்திசெய்தல் வேண்டும்.

02. ஆயினும், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 க்கு அமைவாக திருத்தப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புகள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களின் பிரகாரம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் உரிய முறையில் நடைபெறாமையினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாக பின்வரும் நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

03. அதற்கிணங்க, உரிய சேவை பிரமாணக் குறிப்புகளில் அல்லது ஆட்சேர்ப்புத் திட்டங்களில் ஒரு வருடத்திற்குள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் நடாத்தப்படவேண்டிய தடவைகள் குறிப்பாக கூறப்பட்டிருப்பினும் உரிய முறையில் பரீட்சைகள் நடைபெறாத காரணத்தினால் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்ய முடியாமல் போன உத்தியோகத்தர்களின் சேவை மூப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்ய வேண்டிய காலப்பகுதிக்குள் சேவை பிரமாணக் குறிப்புகளின் அல்லது ஆட்சேர்ப்புத் திட்டங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய நடைபெறவேண்டியிருந்த பரீட்சை அமர்வுகளின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையிலான அடுத்துவரும் பரீட்சை அமர்வுகளின் மூலம் ஏற்புடைய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்ய முடியும்.

04. மேற்படி 03 ஆம் பந்திக்கு அமைய வினைத்திறன்காண் தடைதாண்டல் நிவாரணங்கள் வழங்கப்படும் போது அது பின்வரும் அனுமதிக்கு ஏற்ப மேற்கொள்ளப்படல் வேண்டும்.

| உத்தியோகத்தர் வகுதி | அனுமதி வழங்கவேண்டிய அதிகாரிகள் |
|---|---|
| 01. அகில இலங்கை சேவைக்குரிய உத்தியோகத்தர்கள் | ஏற்புடைய நிர்வாக அதிகாரி |
| 02. அகில இலங்கை சேவையைச் சாராத இல 06/2006 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் (பின்னிணைப்புII) இல் பொருள்கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் | ஏற்புடைய அமைச்சின் செயலாளர் |
| 03. அகில இலங்கை சேவையைச் சாராத மற்றும் அமைச்சொன்றின் கீழ் வராத இல 06/2006 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் (பின்னிணைப்புII) இல் பொருள்கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் | ஏற்புடைய திணைக்களத் தலைவர் |
| 04. ஒன்றிணைந்த சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்கள் | ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் |
| 05. மேற்படி இல 01,02,03 மற்றும் 04 வகுதிகளை சாராத இல 06/2006 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ( பின்னிணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை உத்தியோகத்தர்கள் | ஏற்புடைய அமைச்சின் செயலாளர் |
| 06. மேற்படி இல 01,02,03 மற்றும் 04 வகுதிகளை சாராத மற்றும் அமைச்சொன்றின் கீழ் வராத இல 06/2006 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்(பின்னிணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை உத்தியோகத்தர்கள் | ஏற்புடைய திணைக்களத் தலைவர் |

05. எவ்வொறெனினும் மேற்படி 03 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எழுத்துமூல, வாய்மூல மற்றும் செயல்முறை பரீட்சைகளுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும். திறன் விருத்தி போன்ற பாடநெறிகள் வினைத்திறன்காண் தடைதாண்டல்களாக சேவை பிரமாணக் குறிப்புகளில் மற்றும் ஆட்சேர்ப்புத்திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடத்து, அத்தகைய உத்தியோகத்தர்களினால் ஏற்புடைய வினைத்திறன்காண் தடைதாண்டல்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் நிவாரண வேண்டுகோள்களுக்குரிய சிபாரிசுகள் அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2011(I) பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

06. மேலும், மேற்படி ஏற்பாடுகளின் கீழ் உள்ளடக்கப்படாத வேறு வினைத்திறன்காண் தடைதாண்டல்கள் தொடர்பாக நிவாரணங்கள் கோரப்படுகின்ற போதும் அவற்றுக்கான சிபாரிசுகள் அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2011(I) பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

07. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2014 இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எச்.எம்.காமினி செனெவிரத்ன

செயலாளர்

அரசாங்க சேவை ஆணைக்குழு